**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.09.2025**
**OS. No. 56/2017**
**வழக்கு சாட்சி DW.1–உஷாராணி , க/பெ. காமேஷ்வரன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) பட்டா என் பெயரில் வழங்கப்பட்டுள்ளதை ரத்து செய்யுமாறு கேட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி என் கணவரின் மாமா ஆவார். ஏற்கனவே தாவா சொத்து குறித்து இதே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. என் நிரூபண வாக்குமூலத்தில் அ.வ.எண்.249/2012 என்ற எண்ணில் வாதியின் சகோதரர் வழக்கு தாக்கல் செய்துள்ளததாகவும், அது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அது என் கணவர் சொல்லி எனக்கு தெரியவந்தது. 2 முதல் 4 பிரதிவாதிகளை பொருத்தவரையில் வருவாய் ஆவணங்களை நிர்வகித்து வருபவர்கள் என்றால் சரிதான். அவர்கள் ஆவணங்கள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் வருவாய் ஆவணங்களில் திருத்தம் மேற்கொள்வார்கள் என்றால் சரிதான். அதே நடைமுறையில் தான் இந்த வழக்கு சொத்திலும் வருவாய் ஆவணங்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) வருவாய் அலுவலர்களை பொருத்தவரையில் அவர்களது நடவடிக்கையில் ஏதேனும் குறை இருந்தால், அவர்களது மேல் அதிகாரியிடம் மனு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என்றால் எனக்கு தெரியவில்லை. வாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக ஏதேனும் வருவாய் அலுவலர்களிடம் மனு கொடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. வாதிகளுக்கும், எங்களுக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சனை சம்மந்தமாகத்தான் இந்த வழக்கு என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் வருவாய் நிலை ஆணைகளின் படி தான் செயல்பட்டுள்ளார்கள் என்றும், அதனால் இந்த

வழக்கை பொருத்தவரையில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.